வரத்துக் கழகங்களுக்கு உள்ள ரப்பர் தேவையை நிறைவு செய்ய அரசு முயன்று வருகிறது.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தரமான ரப்பர்களைத் தரும் மாவட்டம் குமரி மாவட்டம். அங்கே ரப்பர் தயாரிப்பதற்கான மூலப்பொருள் அதிக அளவில் கிடைப்பதால், அங்கேயே ஒரு ரப்பர் தொழிற்சாலை உருவாக்க அரசு தீவிரமான முயற்சி எடுத்து, அந்தத் தொழிற்சாலையை உருவாக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலில் அங்கே நூல் இழை ரப்பர் உற்பத்தி செய்யும் தொழிலை ஆரம்பிக்க இருக்கிறோம். மற்றவற்றைப் பற்றி தொடர்ந்து பரிசீலிக்கலாம்.

பத்திரப்பதிவு அலுவலகங்களில் எக்ஸிராக்ஸ் இயந்திரங்களைப் பயன்படுத்துதல்.

*வினா எண். 1030—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலுள்ள துணைப் பத்திரப்பதிவு அலுவலகங்களில் ஆவணங்களுக்கு நகல்கள் எடுக்கும் எக்ஸிராக்ஸ் (XEROX) இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா?

(ஆ) இம்மாநிலத்தில் எக்ஸிராக்ஸ் இயந்திரங்களைப் பயன்படுத்தும் அலுவலகங்கள் எவை, எவை? மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:— (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆவணங்களை நகல்கள் எடுக்க எக்ஸிராக்ஸ் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டால், விரைவாக நகல்கள் எடுப்பதற்கு முடியும். அதிலே எந்தவிதமான தவறும் ஏற்படுவதற்கு வழியில்லை. ஆகவே, ஏன் அந்த இயந்திரத்தைப் பயன்படுத்த அரசு தயக்கம் காட்டுகிறது என்று சொல்ல மாட்டேன், தாமதம் காட்டுகிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ, கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தயக்கமோ, தாமதமோ காட்டவில்லை, ஆனால் அதற்கு மாறாக 20 சார் பதிவாளர் அலுவலகங்களில் 4 லட்சத்து 17 ஆயிரத்துபதினைந்து ரூபாய் செலவில் போட்டோ காப்பி எடுக்கும் மெஷின்களை பரிட்சார்த்தமாக முக்கிய நகரங்களில் வைபதற்கான கருத்துருவை அரசு ஆராய்ந்து

1981 மே 14]

கொண்டு இருக்கிறது. விரைவில் செயல்படுத்தப்படும். இன்றைக்கு அதன் காரணமாக பல நன்மைகள் ஏற்பட இருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார் என்று நம்புகிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இந்தப் பத்திரப் பதிவு முறையை மலேசியாவில் இருப்பதைப் போல், இங்கே கொண்டு வர அரசு முன் வருமா? மலேசியாவில் பத்திரங்களைப் பதிவு செய்கிற காலத்திலேயே பாஸ்போர்ட் சிஸ்டம்போல் அவர்களே ஒரு அச்சடித்த பாரங்களில் பத்திரங்களைப் பதிவு செய்கிறார்கள். அதனால் உடனடியாகப் பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு நகல் அவர்கள் வைத்துக்கொள்கிறார்கள். இன்னொரு நகல் அரசாங்கமே வைத்துக்கொள்கிறது. அது மாதிரி அந்த சொத்து மாற்றம் செய்கிற போதும், அந்தப் பாரத்திலேயே இன்னொரு காலத்தை பூர்த்தி செய்து கொடுத்தால், அது முடிவு அடைந்து விடுகிறது. ஆகவே இதன் காரணமாக உடனுக்குடன் அந்த பதிவுமுறை முடிந்துவிடுகிறது. ஆகவே மலேசியாவில் உள்ள அந்த முறையை இங்கே நம்முடைய நாட்டுக்கு ஏற்ற மாற்றங்களுடன் கொண்டு வருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, பரிசீலனை செய்ய முயல்வோம்.

சென்னை நகரில் திரையரங்குகள் கட்டுவதற்கான மாநகராட்சியின் திட்டம்

*வினா எண். 1031— திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி, சென்னை நகரில் திரையரங்குகள் கட்டக் கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு— • (அ) ஆம்.

(ஆ) பட்டினப்பாக்கம் பகுதியில் ஒசியானிக் விடுதிக்கருகில் தெற்குக் கால்வாய் கரைச் சாலையில் ரூ. 97.40 இலட்ச மதிப்பீட்டில் பல்பொருள் நவீன அங்காடியினைக் கொண்ட திரையரங்கு ஒன்றைக் கட்டுவதற்கும் வள்ளுவர் கோட்டம் அருகில் கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் ரூ. 88 இலட்ச மதிப்பீட்டில் பல்பொருள் நவீன அங்காடியினைக் கொண்ட திரையரங்கு ஒன்றைக் கட்டுவதற்கும் சென்னை மாநகராட்சி திட்டம் தயாரித்து அரசின் ஒப்பளிப்புக்காக அனுப்பியிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS